**செய்தி வெளியீடு எண்: 01/05/2021** **நாள்: 04.05.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**06.05.2021 முதல் மெட்ரோ இரயில்களில் 50% இருக்கைகளில் மட்டுமே பயணிகள் பயணிக்க அனுமதி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மெட்ரோ இரயில்களிலும் கொரோனா வைரஸை தடுப்பதற்காக போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது, மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்பட்டு வருகிறது.

மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் அனைத்து பயணிகளுக்கும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படுகிறது. மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் கை சுத்திகரிப்பான்கள் வைக்கப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்கள் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய அறிவிப்புகள் அவ்வப்போது மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் அறிவிக்கப்படுகின்றன.

தமிழக அரசின் அறிவுறுத்தல்களின்படி கொரோனா வைரஸை கட்டுப்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 06.05.2021 முதல் 20.05.2021 வரை மெட்ரோ இரயில்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

பயணிகள் மெட்ரோ இரயில்களில் குறிக்கப்பட்டுள்ள “X” குறியீடு இருக்கைகளை தவிர்த்து இடைவெளியுடன் அமர்ந்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், பயணிகள் மெட்ரோ இரயில்களில் நின்றபடி பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தற்போது, வார நாட்களில் திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை மெட்ரோ இரயில் சேவைகள் உச்ச நேரங்களில் 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் இயக்கப்படுகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கோயம்பேட்டில் உள்ள நிர்வாகக் கட்டிடத்தில் அமைந்துள்ள செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணிப்புக் கேமரா மூலம் அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பயணிகளின் தனிமனித இடைவெளி மற்றும் பயணிகளின் வருகை கண்காணிக்கப்பட்டு உச்ச நேரம் மற்றும் சாதாரண நேரங்களில் மெட்ரோ இரயில் சேவைகளை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் தேவையற்ற பயணத்தைத் தவிர்த்து, அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே பயணிக்க வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**